لا إله إلا الله محمد رسول الله

# நபி வழி

## உண்மை இஸ்லாத்தின் கொள்கை விளக்க இதழ்





அக்டோபர் - 2009 விலை ரூபாய் 7/-

# சலவாத்

## திருக்குர்ஆனிலிருந்து...

''நிச்சயமாக அல்லாஹ் இந்த நபியின் மீது அருளை பொழிந்து கொண்டிருக்கின்றான். வானவர்களும் அருள் பொழிய துஆ செய்து கொண்டிருக்கின்றனர். எனவே நம்பிக்கை கொண்டவர்களே! நீங்களும் அன்னாரின் மீது அருள் பொழிய துஆ கேளுங்கள். மேலும் சலாம் கூறுங்கள்''. *(திருக்குர்ஆன் - 33:57)*

## நபிமொழியிலிருந்து...

''ஒரு முஸ்லிம் என் மீது சலவாத் ஓதினால் அவர் சலவாத் ஓதிக் கொண்டிருக்கும் வரை மலக்குகள் அவர் மீது சலவாத் ஓதுகின்றனர். அவர் நாடினால் அதை அவர் குறைத்துக் கொள்ளலாம்; அவர் நாடினால் அதை அவர் அதிகமாக்கிக் கொள்ளலாம்''. (இப்னுமாஜா)

''எவர் என்மீது அதிகமாக சலவாத் ஓதியவராக இருப்பாரோ அவர்தான் மறுமை நாளில் அனைவரையும் விட எனக்கு மிக நெருக்கமாக இருப்பார்''. *(திர்மிதி கிதாபுஸ் ஸலாத்).*

''என்மீது சலவாத் ஓதுங்கள். ஏனெனில் என்மீது சலவாத் ஓதுவது உங்களுடைய பாவங்களுக்கு பரிகாரமாகும். எவர் என்மீது ஒருமுறை சலவாத் ஓதுவாரோ அவர்மீது அல்லாஹ் பத்துமுறை அருள் புரிவான்''.

## இமாம் மஹ்தி (அலை) அவர்களின் நூல்களிலிருந்து...

''ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு நேர்ந்த சம்பவங்களைப் பற்றிய ஞானம் இருந்தால், அந்த நேரத்தில் உலகத்தின் நிலை எப்படி இருந்தது? அவர்கள் வந்து என்ன செய்தார்கள் என்பது முழுமையாகத் தெரிந்திருந்தால் மனிதன் மெய்சிலிர்த்துப் போய் விடுகிறான். மெய்சிலிர்த்து, அல்லாஹும்ம ஸல்லி அலா முஹம்மதின் (அல்லாஹ்வே! முஹம்மதின் மீது அருளை பொழிவாயாக) எனக் கூறுகின்றான். நான் உண்மையாகவே கூறுகிறேன். இது கதையோ கற்பனையோ அல்ல. ஹஸ்ரத் நபி கரீம் (ஸல்) அவர்கள் என்ன செய்தார்கள் என்பதற்கு திருக்குர்ஆனும் உலகத்தின் வரலாறும் சாட்சி பகர்கின்றன. இல்லையென்றால், அல்லாஹ் அவர்மீது அருளைப் பொழிகின்றான். வானவர்களும் அருளைப் பொழிய துஆ கேட்கின்றனர். நம்பிக்கை கொண்டவர்களே! நீங்களும் அவர்மீது அருள் பொழிய துஆ கேளுங்கள். மேலும் அவர் மீது சாந்தி உண்டாகட்டும் என வேண்டுங்கள் என்று அவர்களுக்காக சிறப்பாக கூறப்பட்டதற்கு என்ன காரணம்? **வேறு எந்த நபிக்காகவும் இந்தக் குரல் எழவில்லை.** இந்த ஒரு மனிதர்தான் வெற்றியுடனும் முழுமையான புகழுடனும் உலகத்தில் வந்தார். அவர் முஹம்மது (புகழப்பட்டவர்) என அழைக்கப்பட்டார். ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம்''.

*(அல் ஹகம் தொகுதி 5 எண் : 2, 17.01.1901 பக்கம் : 3)*

# ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹிமஹுஅல்லாஹ்) அவர்களின் கூற்றிலிருந்து....

‘‘வேறு எந்த நபிக்காகவும் இந்தக் குரல் எழவில்லை என்ற ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்று மிகுந்த கருத்தாழம் கொண்ட கூற்றாகும். இதன் பொருள், வேறு எந்த நபிக்காகவும் நீங்கள் உங்கள் நபியின் மீது சலவாத் ஓதுங்கள் சலாம் கூறுங்கள் என்ற போதனை இதற்கு முன்னர் வேறு எந்த சமுதாயத்திற்கும் வழங்கப்படவில்லை. இந்தச் சிறப்புத் தன்மையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தன்னிகரற்றவராகத் திகழ்கின்றார்கள்.

முழு உலகத்திலும் எத்தனை நபிமார்கள் தோன்றியுள்ளார்களோ அவர்களில் எந்தவொரு நபியின் மீதும் தரூத், சலாம் ஓதி பிரார்த்திக்க வேண்டுமென்ற போதனை அந்த நபியின் சமுதாயத்திற்கு வழங்கப்படவில்லை. பைபிளை நான் படித்தவரை, ஹஸ்ரத் மூஸா (அலை) தனக்கு முன்னால் வந்த எந்த நபியின் மீதாவது அல்லது இப்ராஹீம் நபியின் மீதாவது சலவாத் ஓதியதாக எந்தக் குறிப்பும் இல்லை. அதே போன்று இப்ராஹீம் (அலை) அவர்கள் ஹஸ்ரத் நூஹ் (அலை) மீதோ அல்லது ஹஸ்ரத் ஆதம் (அலை) அவர்கள் மீய்தோ சலவாத் ஓதியதாக எந்தக் குறிப்பும் எனக்குக் கிடைக்கவில்லை. ஆக, இது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் தனிச் சிறப்பாகும். இதில் வேறு யாரும் இணையில்லை. எனவேதான் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ‘வேறு எந்த நபிக்கும் இந்தக் குரல் எழவில்லை’ என்று கூறுகிறார்கள்.

இதைவிட பெரிய விஷயம் என்னவென்றால், இறைவன் ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) மீது தரூத் அனுப்பிய செய்திகூட முந்தைய வேதங்களில் காணப்படவில்லை. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கற்றுத் தந்த சலவாத்தில் தான் அது நமக்குக் காணக் கிடைக்கின்றது.... என்மீது சலவாத் ஓதும் போது ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்கள் மீதும் சலவாத் ஓதுங்கள் என்பதை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கட்டாயமாக்கியிருக்காவிட்டால் நாம் செய்திருக்க மாட்டோம்... ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்கள் மீது யூதர்களும் நம்பிக்கை கொள்கின்றனர். கிறித்தவர்களும் நம்பிக்கை கொள்கின்றனர். ஆனால் முழு உலகத்திலும் எவருடைய நாவிலிருந்தாவது ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்கள் மீது சலவாத் ஓதும் பழக்கம் இருக்கிறதென்றால், அது முஸ்லிம்களிடம் மட்டுமே இருக்கிறது. இது ஹஸ்ரத் முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் செய்த நன்மையாகும்’’.

*(ஜுமுஆ பேருரை 5-3-1999)*

**Parveen Enterprises**
Dealers : Papers, Boards &
Binding Materials
Vadapalani, Chennai 600 026.

**M.Rafique & Sons**
Exporters And Agents
U55, 9th St, Anna Nagar, Chennai-40.
Ph : 2628 1531, Fax : 2628 1532

தொடர் : 8

# தக்தீரே இலாஹி (இறை நியதி)

ஹஸ்ரத் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூது அஹ்மது (ரலி)

மனித செயல்களுடன் தக்தீரின் தொடர்பு

தக்தீர் என்பதன் பொருள் பொது மக்கள் கருதுகின்ற, தத்துவவாதிகள் நம்பிக் கொண்டிருக்கின்ற அதே பொருள் அல்ல என்பது நான் இதுவரை கூறியதிலிருந்து தெரிய வருகிறது. அதாவது எதைச் செய்தாலும் அது மனிதன் செய்வதுதான் என்பதோ அல்லது செய்வதெல்லாம் இறைவன் செய்ய வைப்பவைதான்; நமக்கு அதில் எவ்வித தொடர்பும் இல்லை என்பதோ தக்தீர் (இறை நியதி) ஆகாது. மாறாக, தக்தீர் என்பது இவ்விரண்டுக்கும் இடைப்பட்ட ஒரு வழியாகும். அதுதான் சரியானதும், இஸ்லாமிய போதனைக்கு ஏற்றதுமாகும். இப்போது நான் தக்தீருக்கும் மனித செயல்களுக்கும் என்ன தொடர்பு என்பதைப் பற்றி சிறிது விளக்கமாகக் கூறுகிறேன்.

நான் முதலில் கூறியுள்ளதைப் போன்று, தக்தீர் பலவகைப்படும் என்பதை நன்றாக நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். அதாவது, சாதாரண இயற்கை விதி, சிறப்பான இயற்கை விதி, சாதாரண மார்க்க விதி, சிறப்பான மார்க்க விதி ஆகியவை. இவற்றில் சாதாரண இயற்கை விதி மட்டுமே எல்லா மனிதர்களுடனும் தொடர்புடையது. இறைவன் சில சட்டங்களை ஏற்படுத்தி யுள்ளான். அவற்றின்படியே முழு உலகமும் இயங்குகிறது. அதாவது ஒவ்வொன்றிலும் சில குறிப்பிட்ட தன்மைகளைப் படைத்துள் ளான். அவை தமக்குரிய அப்பணியை தன் வட்டத்திற்குள்ளேயே நிறைவேற்றுகின்றன.

உதாரணமாக, தீயில் எரியக் கூடிய ஆற்றல் வைக்கப்பட்டுள்ளது. எனவே எரியும் தன்மை கொண்ட பொருளைத் தீ பற்றிக் கொண்டால் அத்தீ அப்பொருளை எரித்துவிடும். அப்பொருள் எரிவது தக்தீரின் (விதி) கீழ் நிகழக் கூடியதாகும். ஆனால் இன்ன மனிதர் இன்னார் வீட்டைக் கொளுத்த வேண்டும் என இறைவன் விதிக்கவில்லை. பொருட்களின் தன்மையைப் படைத்தது இறைவன் என்றாலும் அவற்றைப் பயன்படுத்துமாறு யாரையும் அல்லாஹ் வற்புறுத்துவதில்லை.

திருடன் திருடும் போது, அவன் பிறருடைய பொருளை எடுக்கும்போது அப்பொருள் அவனிடம் வந்து விடுவது தக்தீர் (விதி) தான். ஆயினும் ஸய்த் என்பவன் பக்ர் என்பவரின் பொருளைத் திருட வேண்டும் என்று இறைவன் விதிக்கவில்லை. ஸய்துக்கு அப்பொருளை எடுப்பதற்கான அல்லது எடுக்கா திருப்பதற்கான ஆற்றல் இருந்தது.

அல்லது உதாரணமாக மழை பெய்கிறது. அது ஒரு பொதுவான விதியின்படி ஏற்படுகிறது. இன்ன இடத்தில் இன்ன நேரத்தில் மழை வரவேண்டும் என மழை குறித்து அல்லாஹ்வின் குறிப்பான கட்டளை ஏதும் இல்லை. ஆகவே மழை பெய்வது ஒரு விதி (தக்தீர்) ஆகும். ஆனால் குறிப்பிட்ட விதியல்ல. பொதுவான ஒரு

விதியை இறைவன் நியமித்துள்ளான். அந்த நியதியின்படி மழை வருகிறது. சூழ்நிலைகளுக்கேற்றவாறு மழை பொழிகிறது.

ஆனால் நான் கூறியது போன்று இந்த சாதாரண தக்தீரைத் தவிர வேறு தக்தீர்களும் உள்ளன. அவற்றில் அல்லாஹ்வின் சிறப்பான கட்டளைகள் இறங்குகின்றன. அவ்வாறு சிறப்பான கட்டளைகள் இறங்கும்போது சாதாரண விதிகள் சிறப்புக் கட்டளைகளுக் கேற்றவாறு மாற்றியமைக்கப் படுகின்றன. அல்லது சாதாரண விதியின் விதிமுறைகள் முறியடிக்கப்படுகின்றன. ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்களை நெருப்பில் எறிந்த போது இவ்வாறே நடந்தது. எனினும் இந்த விதி எல்லாருக்கும், எல்லா நாளும் இறங்குவதில்லை. மாறாக, இவ்விதிகள் குறிப்பிட்ட அடியார்களுக்காக மட்டுமே வெளியாகின்றன. அவை அவர்களின் உதவிக்காக அல்லது அவர்களின் எதிரிகளின் அழிவுக்காக வெளியாகின்றன. ஏனெனில் சிறப்பானவர்களுடன்தான் சிறப்பான முறையில் நடந்து கொள்ளப்படுகிறது.

ஒரு மனிதனின் இரக்கமான நிலைமையும் இந்த மாதிரியான சிறப்புவிதி இறங்குவதற்குக் காரணமாக அமையக் கூடும் – அம்மனிதர் அவ்வளவு நல்லவராக இல்லாவிடினும் சரியே! அவருடைய நிலைமை குறிப்பாக இரக்கப்பட வேண்டியதாக இருக்கும் சமயத்திலும் இறைவனின் ரஹ்மானிய்யத் (கருணை) எனும் பண்பும் அவனுடைய காதிரிய்யத் (வல்லமை) என்ற பண்பைத் தூண்டிவிடுகிறது. மேலும் அது அந்த அப்பாவியானவரின் துன்பத்தைப் போக்குகிறது; அல்லது அந்த அப்பாவியின் மீது அநீதி இழைத்தவருக்குத் தண்டனை கொடுக்கிறது. இப்படி இறங்கும் சிறப்புவிதி சிலவேளை மனித உறுப்புகளின் மீதும் இறங்குகிறது. அதாவது மனிதனைக் கட்டாயப்படுத்தி அவனால் ஒரு வேலை செய்ய வைக்கப்படுகிறது. உதாரணமாக, ஒரு குறிப்பிட்ட சொல்லைக் கூற வேண்டுமென்று நாவிற்கு கட்டளையிடப் படுகிறது. சொல்பவரின் மனம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் அவருக்கு அச்சொற்களைக் கூற வேண்டியுள்ளது. அதனைத் தடுக்க அவரால் முடியாது.

அல்லது சில நேரத்தில் கைக்கு ஒரு கட்டளையிடப்படுகிறது; இன்னும் சில வேளை முழு உடலுக்கும் ஏதாவதொரு கட்டளை போடப்படுகிறது. அப்போது மனிதன் தன் கையையோ, முழு உடலையோ கட்டுப்படுத்தவே முடியாது. அவை இறைவனுடைய அதிகாரத்தில் இருக்கும்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு நேர்ந்த ஒரு சம்பவம் இவ்வாறு கூறப்பட்டுள்ளது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் தம் கிலாஃபத்தின் காலக்கட்டத்தில் மேடையில் நின்று குத்பா கொடுத்துக் கொண்டிருந்தார்கள். தன்னையுமறியாமல் அவர்களின் நாவில், 'யா சாரியதல் ஜபல் யா சாரியதல் ஜபல்' (பொருள் : சாரியா அவர்களே! மலையின் மேல் ஏறிவிடுங்கள். சாரியாவே! மலையின் மேல் ஏறுங்கள்) என்ற சொற்கள் வெளியாயின. இந்த சொற்கள் குத்பாவோடு சம்பந்தமில்லாதவையாக இருந்ததால் நீங்கள் 'என்ன அப்படிச் சொன்னீர்கள்?' என மக்கள் வினவினார்கள். அதற்கு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், 'இஸ்லாமிய படைத் தளபதியான சாரியா ஓரிடத்தில் நின்று கொண்டிருக்கிறார்கள். எதிரிகள் அவருடைய பின்பக்கத்திலிருந்து தாக்க முனைகின்றனர். இஸ்லாமிய

படை அழிந்து விடுமளவுக்கு தாக்க முயற்சித்தனர். அப்போது அருகிலேயே ஒரு மலை இருந்ததைக் கண்டேன். அதன் மேல் ஏறி எதிரிகளின் தாக்குதலிலிருந்து தப்பித்து விடலாம் எனத் தோன்றியது. எனவே நீங்கள் அந்த மலையில் ஏறிக் கொள்ளுங்கள் என்று நான் குரல் கொடுத்தேன்' என்று பதிலளித்தார்கள்.

இன்னும் அதிக நாள் ஏதும் கழிந்திருக்க வில்லை. சாரியாவிடமிருந்தும் இதே போன்ற ஒரு தகவல் கிடைத்தது. 'அப்போது ஒரு குரல் தோன்றியது. அக்குரல் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் குரலை ஒத்திருந்தது. அதுவே அபாயத்தைப் பற்றி எங்களுக்கு அறிவித்தது. எனவே நாங்கள் மலைமேல் ஏறி எதிரிகளின் தாக்குதலி லிருந்து தப்பித்தோம் என சாரியா அவர்கள் அதில் எழுதியிருந்தார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் நாவு தம் கட்டுப்பாட்டிற்குள் இல்லாமலிருந்தது என்பதும் தூரம், தொலைவு ஆகியவை ஒரு பொருட்டாக இல்லாத அந்த ஆற்றல் மிக்க இறைவனின் பிடியில் இருந்தது என்பதும் இதிலிருந்து தெரிகிறது.

சுருங்கக் கூறின், தக்தீர் சிலவேளை உடலுறுப்புகளின் மீதும் வெளிப்படுகிறது. அல்லாஹ் கட்டாயமாக வேலையைச் செய்ய வைக்கின்றான் என்று சிலர் நம்புவதைப் போன்றே அவன் மனிதனிடமிருந்து பலவந்தமாக வேலை வாங்குகிறான். அதில் மனிதனுக்கு எந்த தொடர்பும் இல்லை. அவன் ஒரு கருவியைப் போன்றோ அல்லது தானாகவே அசையக் கூடிய சக்தியில்லாத இறந்தவனைப் போன்றோ ஆகிவிடுகிறான். அவன் உயிருடன் இருக்கின்ற ஒருவனின் பிடியில் இருக்கின்றான். அவன் தான் விரும்புவதை அவன் மூலம் செய்ய வைக்கிறான். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் இந்த சம்பவமும் இவ்வாறான தக்தீரின் கீழ் நடந்ததுதான். இதற்கும் அவர்களுக்கும் எந்த சம்பந்தமுமில்லை. இல்லையெனில், இவ்வளவு தொலைவு வரை தம் குரலை எட்ட வைக்க அவர்களுக்கு எங்கே ஆற்றல் இருந்தது?

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அனைத்து முஃஜிஸாக்களின் (அற்புதங் களின்) உறைவிடமாவார்கள். இவ்வகையான தக்தீரின் உதாரணம் அவர்களின் வாழ்க்கையிலும் காணப்படுகிறது. அவர்கள் ஒருமுறை போரிலிருந்து திரும்பும்போது வழியில் ஒரு காட்டில் பகல் வேளையில் ஓய்வெடுப்ப தற்காகத் தங்கினார்கள். எல்லா நபித்தோழர்களும் இங்குமங்கும் தனித் தனியாக உறங்கச் சென்றார்கள். எவ்விதமான அபாயமும் இல்லாதிருந்தபடியால் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களும் ஓரிடத்தில் படுத்துவிட்டார்கள். திடீரென்று கண்விழித் ததும், ஒரு காட்டரபியின் கையில் தமது வாளைக் கண்டார்கள். அவன் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் முன்னால் வாளேந்தி, இப்போது உம்மை யார் காப்பாற்றுவார்? எனக் கேட்டான். 'அல்லாஹ்' என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். இதைக் கூறி முடிப்பதற்குள் காட்டரபியின் கையிலிருந்து வாள் கீழே விழுந்துவிட்டது. அந்த நேரத்தில் அவனுடைய கையிலிருந்து வாள் கீழே விழக் கூடாது என முழு உலகமும் சேர்ந்து முயற்சித்தாலும் எதுவும் செய்ய முடியாது. ஏனெனில் மனிதன் அங்குவரை சென்றடைவதற்கு நேரமாகி விடும். இறைவனைத் தவிர வேறு யாராலும் எதுவும் செய்ய முடியாது. அவ்வாறான குறிப்பிட்ட காலகட்டத்தில் அல்லாஹ்வின் குறிப்பிட்ட அடியாருக்காக குறிப்பிட்ட தக்தீர் (விதி) வெளியாகின்றது.

மூளை சரியாக இருந்தவரும், இறைத் தூதரைக் கொல்ல வேண்டும் என எண்ணியவருமான அந்த காட்டரபியின் கை அசையக் கூடாது என்று இறை தக்தீர் இறங்கியது. எனவே அது அசையவில்லை. இது ஒரு குறிப்பிட்ட நேரத்தில் ஒரு குறிப்பிட்ட ஒருவரின் உடலுறுப்பின் மீது இறங்கிய ஒரு தக்தீர் (விதி) ஆகும்.

இத்தகைய விதிகள் இருக்கும்போது மனிதன் கட்டாயத்திற்குள்ளாக்கப்பட்டவன் என்று ஒருவர் கூற முடியுமா? என்றால் இல்லை. ஏனெனில் இவை இருந்த போதிலும் மனிதன் கட்டாயத்திற் குள்ளாக்கப்படவில்லை; மாறாக, அது குறித்து விசாரிக்கப்படுவான். ஏனென்றால் இந்த விதி எல்லா நேரமும் வெளியாவ தில்லை. குறிப்பிட்ட நிலைமை களிலேயே வெளியாகின்றன. மனிதன் கட்டாயத்திற் குள்ளாகக் கூடிய, நற்கூலி தண்டனை ஆகியவற்றின் வட்டத்தை விட்டு அவனை வெளியேற்றக் கூடிய எந்த வொரு தக்தீரும் வெளியாவதில்லை.

இந்த மாதிரியான தக்தீர் ஹஸ்ரத் ரஸூலே கரீம் (ஸல்) அவர்களின் காலத்தில் நிழந்ததாக இன்னும் பல சம்பவங்களை உதாரணமாகக் கூறலாம்.

அஹ்ஸாப் போரில் அரபிகள் எல்லாரும் சேர்ந்து மொத்தமாக முஸ்லிம்களைத் தாக்கினார்கள். மதீனாவை எதிரிகள் தாக்கினால் மதீனாவிலுள்ள முஸ்லிம்களும் யூதர்களும் சேர்ந்து அவர்களோடு போரிடுவோம் என ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் யூதர்களுடன் உடன்படிக்கை செய்திருந்தார்கள். எனவே அச்சமயத்தில் முஸ்லிம்களுக்கு உதவி செய்வது யூதர்களின் கடமையாகும். ஆனால் யூதர்கள் இந்த இதற்கு முன்னரே உடன்படிக்கைக்கு நேர் மாறாக, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் எதிரிகளிடம், 'நீங்கள் வெளியே ஆண்களைத் தாக்குங்கள். நாங்கள் நகரத்தில் உள்ள பெண்களையும் குழந்தைகளையும் கொன்று விடுகிறோம் என சதித் திட்டம் போட்டார்கள்.

ஹஸ்ரத் ரஸூல் கரீம் (ஸல்) அவர்கள் வெளியே போரிடுவதற்காகச் சென்ற போது நிராகரிப்பவர்கள் போரிடவில்லை! ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் திரும்பி வந்து யூதர்களிடம் 'இப்போது கூறுங்கள். உங்களோடு எவ்வாறு நடந்து கொள்வது? உங்களுக்கு என்ன தண்டனை கொடுக்க வேண்டும் எனக் கேட்டார்கள். கருணையுள்ளம் கொண்ட ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்கள் அந்த யூதர்களுக்குத் தண்டனை கொடுத்திருந் தால், 'இன்று உங்கள் மீது எந்த பலவந்தமும் இல்லை' என்று கூறி மக்கத்தினருக்கு வழங்கிய அதே (மன்னித்து, விட்டுவிடும்) தண்டனையைத் தான் கொடுத்திருப்பார்கள். அதாவது அவர்களை மன்னித்திருப்பார்கள். ஆனால் (யூதர்களாகிய) அவர்களோ, நாங்கள் உங்கள் தீர்ப்பை ஏற்க மாட்டோம் எனக் கூறிவிட்டார்கள்.

இதை இறைவனே அந்த யூதர்களின் வாயால் சொல்ல வைத்திருக்கிறான் என்றே கூறவேண்டும். ஏனெனில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது பகைவர்களுடன் மென்மையாக நடந்து கொண்டதாகத்தான் அந்த யூதர்கள் பல ஆண்டுகளாக அனுபவத்தால் கண்டு வந்திருந்தார்கள். அவ்வாறிருந்தும், நாங்கள் உங்கள் தீர்ப்பை ஏற்கமாட்டோம் என்றனர். பின்னர் யார் தீர்ப்பை ஏற்பீர்கள் என்று

வினவப்பட்டபோது அந்த யூதர்கள் ஹஸ்ரத் ஸஅத் (ரலி) அவர்களின் பெயரைச் சொன்னார்கள். இவர்களுக்கு என்ன தண்டனை கொடுப்பது என்று ஸஅத் (ரலி) அவர்களிடம் கேட்ட போது, இவர்களில் வாளேந்தியிருக்கும் இளைஞர்கள் அனைவரும் கொல்லப்பட வேண்டும் எனத் தீர்ப்பளித்தார்கள். அவ்வாறே செய்யப் பட்டது.

யூதர்களின் நாவின் மூலமாக இந்த தக்தீர் (விதி) ஏன் வெளிப்பட்டது? ஏனென்றால் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களின் கருணை மற்றும் அன்னாரின் அந்தஸ்தின் காரணமாக இந்த தக்தீர் அன்னாரின் நாவின் மூலமாக வெளிப்படுவது சாத்தியமில்லா ததாக இருந்தது. அவ்வாறு வெளிப்பட்டால் அன்னாரின் உள்ளம் மிகக் கடினமானது என்றாகிவிடும். ஆனால் காஃபிர்களின் நாவில் வெளிப்படலாம். ஏனெனில் அவர்களின் உள்ளங்கள் ஏற்கனவே கடினமாயிருந்தது.

ஆகவே நாங்கள் உங்கள் பேச்சைக் கேட்க மாட்டோம்; இன்னாரின் பேச்சைத்தான் கேட்போம் என யூதர்கள் கூறுவதன் மூலம் இந்த தக்தீர் அவர்களின் வாயிலிருந்தே வெளியானது.

செயல்கள், நாக்கு ஆகியவற்றின் மீது வெளியாகும் இவ்விரு தக்தீர்களும் மார்க்க ரீதியிலான செயல்களில் நிகழ்வதில்லை. காரணம், மார்க்க ரீதியான செயல்கள் குறித்து மறுமைநாளில் கேள்வி கணக்குக் கேட்கப்படும். எனவேதான் இறைவன் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களை வலுக்கட்டாயமாகத் தொழ வைக்கவில்லை; வலுக்கட்டாயமாகச் செய்தான் என்றால் அது ‘சாரியாவே! நீர் மலையின் மீது ஏறிக் கொள்ளும்’ என்று நாவில் வெளிப்படுத்தியதுதான்.

அவ்வாறே இறைவன் யூதர்களை வலுக்கட்டாயமாக தொழுகையிலிருந்து தடுக்கவோ அல்லது முஹம்மது (ஸல்) அவர்களின் மீது ஈமான் கொள்ளாதிருக்கவோ செய்யவில்லை. மாறாக யூதர்கள் தம் செயலுக்கேற்ற பலனைப் பெறவேண்டும் என்ற விதியை இறக்கினான்; இந்த தக்தீர் மார்க்க சட்டரீதியான செயல்களின் மீது இறங்குவதில்லை. மார்க்க சட்டத்தின் படி தண்டனைக்கு ஆளாகாத செயல்களிலேயே இவ்வகையான தக்தீர் இறங்கும். ஏனெனில் மார்க்க செயல்களின் விஷயத்தில் விதி விதிக்கப்பட்டிருந்தால் அதாவது பலவந்த மாக களவு செய்ய வைத்தால் அல்லது வலுக்கட்டாயமாக தொழ வேண்டும் என வற்புறுத்தப்பட்டால் அதன் மூலமாக நற்கூலியோ தண்டனையோ கிடைப்ப தற்குக் காரணமில்லாமற் போய்விடுகிறது. அதுமட்டுமன்று; அவ்வாறான சூழ்நிலை யில் தண்டனை வழங்குவது அநீதியாகி விடும். இறைவன் அநீதியிழைப்பதிலிருந்து தூய்மையானவன்.

## தக்தீர் வெளியாகும் போது காரணிகளை பயன்படுத்துவது ஆகுமானதா இல்லையா?

தக்தீர் (இறைநியதி) வெளிப்படும்போது காரணியைக் கையாள்வதற்கான ஆற்றல் மனிதனுக்கு இருக்குமா இல்லையா என்பது குறித்து தற்போது நான் கூறுகிறேன்.

உடல் உறுப்புகளின் மீது வெளிப்படும் தக்தீருக்கு எதிராக காரணிகளைக் கையாளும் ஆற்றல் மனிதனுக்கு இல்லை, ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் நாவுக்கு ஒரு குறிப்பிட்ட

சொற்களை சொல்லும்படியாக கட்டளை யிடப்பட்டதும், உலகில் ஏதாவதொரு பொருளை உபயோகித்து அதன்மூலம் இந்த சொற்களைச் சொல்வதிலிருந்து தம் நாவை தடுத்து நிறுத்தும் ஆற்றல் அவர்களுக்கு இருந்ததில்லை.

அவ்வாறே காஃபிரின் கையிலிருந்தும் வாள் நழுவி விழ வேண்டும் என்றும், அவனால் முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் மீது தாக்குதல் செய்ய முடியாது என்றும் இறைநியதி வெளியான போது அதற்கு எதிராகச் செய்ய அந்தக் காஃபிரால் முடிந்ததில்லை.

இதே போன்று உள்ளத்தில் இறை நியதி தோன்றும்போது அதற்கு எதிராக – மாற்றமாக மனிதனால் எதுவும் செய்ய இயலாது. ஆனால் எந்த தக்தீர் மனிதனின் உடலுறுப்புகளின் மீது வெளியாகாமல் மற்ற இடங்களில் வெளியாகின்றதோ அல்லது மனிதனின் சிந்தனைக்குட்படாது இயற்கை யாகவே வேலை செய்து கொண்டிருக்கும் மனித உடலுறுப்பு ஏதாவதொன்றில் தக்தீர் வெளியாகின்றதோ அப்போது காரணிகளை உபயோகிக்கும் ஆற்றல் கிடைக்கிறது.

இவ்விதமான நிலைமையில் இரண்டு நிலைகள் உள்ளன. 1. இறைவன் புறமிருந்து தக்தீர் இறங்கியுள்ளது என்பது அவருக்குத் தெரிந்து விடுகிறது.2. இறைவன் புறமிருந்து ஏதாவதொரு தக்தீர் இறங்கியுள்ளது என்பது அவருக்குத் தெரியாமலிருக்கிறது. தக்தீர் வெளியாகியுள்ளது என்பதே தெரியாதி ருக்கும் நிலையில் அவர் காரணிகளை உபயோகிக்கிறார் எனில் அது அவருக்கு பாவமாகாது. ஆனால் இறைவன் இந்த தக்தீரை இறக்கியிருக்கிறான் என்பது அவருக்குத் தெரியும்போது அதற்கும் இரு நிலைகள் உள்ளன:

1. சில காரணிகளை அல்லது எல்லா வகையான காரணிகளையும் கையாள வேண்டும் என இறைவனிடமிருந்தே அவருக்குக் கட்டளை இறங்குகிறது. அதாவது, தக்தீர் ஏற்படுகிறதென்றாலும் அது காரணிகளைச் சார்ந்திருக்கிறது. உதார ணமாக, ரஸூலே கரீம் (ஸல்) அவர்கள் வெற்றி பெறுவது விதிக்கப்பட்ட ஒன்றாகும். ஆனால் அவ்வெற்றி ‘புனிதப் போர்’ எனும் காரணிகளைச் சார்ந்திருந்தது.

2. காரணிகளைச் சாராத தக்தீர் அப்போது காரணிகளைக் கையாளாமல் இருப்பது அடியாருக்குக் கடமையாகிவிடுகிறது. அப்போது காரணிகளைக் கையாள்வராயின் நஷ்டத்திற்குள்ளாவது மட்டுமல்லாது இறை கோபத்திற்கும் ஆளாவார். இதன் முக்கிய நோக்கம், காரணிகளின்றியும் இறைவனால் காரியத்தைச் செய்ய முடியும் என்று அடியாருக்கு உணர்த்துவதேயாகும்.

இதற்கு எடுத்துக்காட்டாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஒரு சம்பவத்தை நான் முன் வைக்கிறேன். ஒருமுறை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு கடும் இருமலாக இருந்தது. அப்போது முபாரக் அஹ்மதுக்குச் சிகிச்சை நடைபெற்றதால் முழு இரவும் அவர்கள் விழித்துக் கொண்டிருந்தார்கள். நான் கூட அந்நாட்களில் இரவு 12 மணிக்கு உறங்கி அதிகாலையில் சீக்கிரமே விழித்து விடுவேன். ஆனால் நான் உறங்கச் செல்லும் போது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை விழித்திருக்கக் கண்டேன். நான் தூங்கி எழுந்த போதும் அவர்களை விழித்திருந்தவாறே

கண்டிருக்கிறேன். இந்த அளவுக்கு உழைத்ததால் அவர்களுக்கு கடுமையான இருமல் வந்து விட்டது.

அந்நாட்களில் நான்தான் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு மருந்துகளெல்லாம் குடிக்கக் கொடுத்து வந்தேன். மருந்து கொடுப்பது என் பொறுப்பாக இருந்ததால் மருத்துவர்களின் ஆலோசனையின்படி இருமலுக்கு ஒவ்வாத பொருள்களைத் தின்பதிலிருந்து அவர்களை தடுத்தும் வந்தேன்.

ஒருநாள் ஒருவர் அன்னாருக்காக வாழைப்பழத்தை அன்பளிப்பாகக் கொடுத்தார். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மவ்ஊது (அலை) வாழைப்பழத்தைச் சாப்பிட விரும்பினார்கள். ஆனால், உங்களுக்கு இருமல் இருக்கிறதே. நீங்கள் ஏன் வாழைப்பழம் சாப்பிடுகிறீர்கள் என்று கூறி நான் தடுத்ததும், அவர்கள் புன்சிரித்து வைத்து விட்டார்கள். சுருக்கமாக நான் டாக்டர்களின் ஆலோசனைப்படி செயல்படச் சொன்னேன்; எனவே அவர்கள் என் பேச்சைக் கேட்டார்கள்.

இதே நாட்களில் டாக்டர் கலீபா ரஷீதுத்தீன் சாஹிப் ஹஸ்ரத் சாஹிபுக்காக பிரான்ஸிய ஆப்பிள் கொண்டு வந்தார்கள். அது எந்த அளவுக்கு புளிப்பாக இருந்ததென்றால் இருமல் இல்லாதவர் களுக்கும் இருமல் வந்து விடும் போலும். ஹஸ்ரத் சாஹிப் அதனை வெட்டி சாப்பிட ஆரம்பித்தார்கள். நான் தடுத்தும் கேட்காமல் சாப்பிட்டுக் கொண்டே யிருந்தார்கள். இந்த அளவுக்கு உங்களுக்கு இருமல் இருந்தும் நீங்கள் புளிப்பான ஆப்பிளை சாப்பிடு கின்றீர்களே என நான் அங்கலாய்த்துக் கொண்டேன். ஆனால் அவர்களோ பொருட்படுத்தவேயில்லை. ஆப்பிளை வெட்டி வெட்டி சாப்பிட்டுக் கொண்டே சென்றார்கள்; அத்துடன் புன்சிரிப்பு செய்து கொண்டேயிருந்தார்கள். ஆப்பிளைத் தின்று விட்ட பிறகு கூறினார்கள். உனக்கு என்ன தெரியும்? இருமல் சரியாகிவிட்டது. இப்போது எந்தவிதமான பத்தியம் இருக்கவும் தேவையில்லை என்று எனக்கு இல்ஹாம் இறங்கியுள்ளது. அல்லாஹ்வின் வார்த்தை க்கு மதிப்பளித்தவனாய் நான் ஆப்பிளை அது புளிப்பாக இருந்தபோதிலும் சாப்பிட்டேன் என்றார்கள். அவ்வாறே இதற்குப் பிறகு அவர்களுடைய இருமல் சரியாகிவிட்டது. எவ்வித தொல்லையும் ஏற்படவில்லை.

(தொடரும்)

**தமிழில்:**

**மவ்லவி** O.M. **முஸ்ஸம்மில் அஹ்மத்** H.A

**நபி வழி சந்தா விபரம்**

ஆண்டு சந்தா - **ரூபாய்** 80/- தனி பிரதி - **ரூபாய்** 7/-

D.D அல்லது காசோலை மூலம் அனுப்புபவர்கள் K.NASIR AHMED என்ற பெயரில் அனுப்பவும்.
மேலும் விபரங்களுக்கு தொடர்பு கொள்க : நிர்வாகி - **நபி வழி** அஹ்மதிய்யா முஸ்லிம் மிஷன்
11, முதல் பிரதான சாலை, யு.ஐ. காலனி, கோடம்பாக்கம், சென்னை - 600 024. **Ph : 2481 7174**

தொடர் :3

# சிறுவர் பகுதி

## இஸ்லாம்

**10. இன்னத்தீன இந்தல்லாஹில் இஸ்லாம்**

பொருள் : நிச்சயமாக அல்லாஹ்விடம் உண்மையான மார்க்கம் இஸ்லாம் அதாவது முழுமையான கட்டுப்படுதல் தான். *(திருக்குர்ஆன் 3:20)*

**11. வமன்ய் யப்தகி கைரல் இஸ்லாமி தீனன் ஃபலன்ய் யுக்பல மின்ஹு**

பொருள் : இஸ்லாம் அல்லாத வேறு (ஏதாவது) மார்க்கத்தை மேற்கொள்ள விரும்புபவனிடமிருந்து அது ஒருபோதும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

*(திருக்குர்ஆன் : 3:86)*

**12. அல்யவ்ம அக்மல்த்து லகும் தீனகும் வஅத்மம்த்து அலைக்கும் நிஃமத்தீ வரழீத்து இஸ்லாம தீனா.**

பொருள் : இன்று நான் உங்களுக்காக, உங்கள் மார்க்கத்தை முழுமையாக்கியுள்ளேன். மேலும் உங்களுக்கு என் அருளை நிறைவு செய்துள்ளேன். மேலும் உங்களுக்கு மார்க்கமாக, இஸ்லாத்தைத் தேர்ந்தெடுத்துள்ளேன். (திருக்குர்ஆன் 5:4)

**13. புனியல் இஸ்லாமு அலா கம்ஸின். ஷஹாதத்து அன்லாயிலாஹ இல்லல்லாஹு வ அன்ன முஹம்மதர் ரஸூலுல்லாஹ் வஇகாமிஸ் ஸலாத்தி, வஈதாயிஸ் ஸகாத்தி, வல்ஹஜ்ஜி, வஸவ்மி ரமலான்.''**

பொருள் : இஸ்லாத்தின் அடிப்படை ஐந்து விஷயங்களில் இருக்கின்றது.

1. அல்லாஹ்வையன்றி வணக்கத்திற்குரியவன் யாருமில்லை என்றும் முஹம்மது அல்லாஹ்வின் தூதர் ஆவார் என்றும் சாட்சி கூற வேண்டும். 2. தொழுகையை நிலைநாட்டுதல். 3. ஸகாத் கொடுத்தல். 4. ஹஜ் செய்தல். 5. ரமலானில் நோன்பு வைத்தல்.

**14. இஸ்லாம் உயிருள்ளமார்க்கமாகும்** *(அல்ஹகம் 31.10.1905)*

இஸ்லாம் அருளுக்குரிய, இறைவனை வெளிப்படுத்துகின்ற மார்க்கமாகும்.

*(பராஹீனே அஹ்மதிய்யா பகுதி 5)*

**15. தேடுபவர்களுக்கு உயிருள்ள அடையாளங்களினால் மனநிம்மதியைத் தருவது இஸ்லாத்திற்கே உரிய சிறப்பாகும்.** *(தப்லீகே ரிஸாலத் தொகுதி : 6)*

**16. இஸ்லாம் என்பது என்ன? அது இறைவனுக்காகவே தன்னை மாய்த்துக் கொள்வதாகும். இறை திருப்திக்காக தனது விருப்பங்களை விட்டு விடுவதாகும்.**

*(துர்ரே ஸமீன்)*

# கேள்வி - பதில்

**ஹஸ்ரத் மிர்ஸா தாஹிர் அஹ்மது** (ரஹிமஹுல்லாஹுத்தஆலா)
**நான்காவது கலீஃபத்துல் மஸீஹ்**

**கேள்வி :** அல்லாஹ் வானங்கள் பூமியின் ஒளியாக இருக்கிறான். ஒளி ஒரு ஆற்றலாகும். அவ்வாறாயின் உலகில் உள்ள ஒவ்வொன்றின் ஆற்றலாகவும் அல்லாஹ் இருக்கிறானா?

**பதில் :** அல்லாஹ்வே இவ்வுலகைப் படைத்தான். எனவே, அவனே அனைத்திற்குமான ஆற்றல் ஆவான். ஆனால் நேரடியாக அல்ல. அல்லாஹ் எதையும் நாடினால் அவன் 'குன்' (ஆகுக) என்று கூறியவுடன் அது நிகழ ஆரம்பித்து விடுகிறது. அல்லாஹ் எதுவும் நிகழ நாடும்போது ஆற்றலை உபயோகிப்பதில்லை. ஆற்றல் படைப்புடன் சம்பந்தப்பட்டது. அல்லாஹ்வுடன் சம்பந்தப்பட்டது அல்ல.

**கேள்வி :** ஒரு குழந்தை அல்லாஹ்விடம் அவனது இருப்பிற்கான சான்றை தனக்கு காட்டுமாறு வேண்டலாமா?

**பதில் :** அல்லாஹ்விடம் அவ்வாறு கேட்கலாம். அல்லாஹ் உண்மையான துஆக்களை கேட்பதுடன் சான்றினையும் வழங்குகின்றான். இதில் எந்தத் தவறும் இல்லை. அல்லாஹ் தனது இருப்பிற்கான அடையாளங்களைக் காட்டுகிறான்.

**கேள்வி :** திருக்குர்ஆன் ஓதும் போதும், தொழுகையிலும் அரபி சொற்களை சரியாக உச்சரிக்க முடியவில்லை எனில் அது பாவமாகுமா?

**பதில் :** இல்லை. உண்மையிலேயே உங்களுக்கு சரியாக உச்சரிக்க தெரியவில்லை எனில், முடிந்த அளவு சரியாக உச்சரியுங்கள். அதன் பின்னரும் பிழை இருந்தால் பரவாயில்லை. ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்கள் அஸஅது என்று உச்சரித்ததை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களோ, சஹாபாக்களோ பெரிதுபடுத்தவில்லை. ஆனால் அரபி சொற்களை சரியாக உச்சரிக்க உண்மையாகவே முயற்சி மேற்கொள்ள வேண்டும்.

**கேள்வி :** மனிதன் மிகவும் அழிவைத் தரக்கூடியவனாக இருப்பது ஏன்?

**பதில் :** பிற உயிரினங்கள் இயற்கையில் அழிவைத் தரக் கூடியவையாக உள்ளன. சில பறவைகள், புலி, சிங்கம் போன்ற விலங்குகள் எல்லாம் உள்ளுணர்வின் அடிப்படையில் அழிவைத் தரக்கூடியவை. மனிதன் நல்லதையும், தீயதையும் அறியக் கூடியவனாக இருந்தும், அழிப்பதற்கு முடிவெடுப்பதன் மூலம் விலங்குகளில் மிகவும் கெட்டவனாகிறான்.

**கேள்வி :** மார்ட்டின் லூதர் கிங் நவீன காலத்து இறைதூதர் என அழைக்கப்படுகிறார். தங்கள் கருத்து என்ன?

**பதில் :** அந்த பேச்சுக்கே இடமில்லை. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குப் பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களை 100% பின்பற்றுபவர் மட்டுமே நபியாக வர முடியும்.

**கேள்வி :** ஒருவர் நேர்மையானவர் என்பதை எவ்வாறு அறிய முடியும்?

**பதில் :** குறிப்பிட்ட எந்த விதியையும் பயன்படுத்தி அறிய முடியாது. ஒன்றைப் பற்றி ஒருவனின் உண்மையும், நேர்மையும் வெளிப்படையானதாகவே இருக்கும். உண்மையாக நடந்து கொள்வதை பிறர் மீது திணிக்க முடியாது. அது மிகவும் ஆற்றல் மிக்கதாகும். ஒருவர் உண்மையுடன் நடத்து கொண்டால் அதனை மறுப்பது பிறருக்கு மிகவும் கடினமானதாக இருக்கும். அது தன்னை வெளிப்படுத்தக் கூடியதும் தனக்குத்தானே சாட்சியாகவும் இருக்கும்.

**கேள்வி :** ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு வந்த ஓர் இறை அறிவிப்பில் அவர்களது நேரம் வீணாகாது என்று கூறப்பட்டுள்ளது. அதன் பொருள் என்ன?

இது அல்லாஹ்விடம் இருந்து கொடுக்கப்பட்ட பெரிய பாராட்டு ஆகும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் ஒரு நொடி கூட வீணாக்கப்படவில்லை. தன்னந்தனியாக அவர்கள் எந்த அளவு பணியாற்றினார்கள் என்றால் அதனை நம்ப முடியாமலும் ஆச்சரியமாகவும் உள்ளது. அவர்கள் தமக்கு வந்த கடிதங்களை தாமே பார்த்தார்கள். கேள்விகளுக்கு பதில் தந்தார்கள். அதிகமாக சுற்றுப் பயணம் மேற் கொண்டார்கள். பல்வேறு நீதிமன்ற வழக்குகளுக்கு சென்றார்கள். ஆறு மாத கால அளவிற்கான பல சுற்றுப் பயணங்களில் அவர்கள் கிறித்தவர்களுடனும் இந்துக்களுடனும் முனாழராவில் (விவாதங்களில்) ஈடுபட்டார்கள். இவையெல்லாவற்றையும் அவர்கள் செய்தார்கள். ஒரு மனிதன் இவையெல்லாவற்றையும் செய்ததனை நம்ப முடியவில்லை. நீர் ஒரு பெரிய மஸீஹ். உமது நேரம் வீணாக்கப்படுவதில்லை என்பது அல்லாஹ்விடமிருந்து வந்த பெரிய பாராட்டுரையாகும்.

**காதியானில்**

**118-வது ஆண்டு மாநாடு**

ஸய்யித்னா ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் இவ்வாண்டு காதியானில் ஆண்டு மாநாடு நடத்துவதற்கு பரிவுடன் அனுமதி வழங்கியுள்ளார்கள். இந்த ஆன்டுமாநாடு டிசம்பர் 26, 27, 28 (சனி, ஞாயிறு, திங்கள்) ஆகிய நாட்களில் நடைபெறும் – இன்ஷா அல்லஹ்.

அருளுக்குரிய இந்த இறை மாநாட்டில் கலந்து கொள்வதற்காக சகோதரர்கள் இப்போதிருந்தே ஆயத்தங்களை மேற்கொள்ளுமாறும், மிக அதிக எண்ணிக்கையில் கலந்து கொள்ளுமாறும் மாநாடு எல்லாவகையிலும் வெற்றிகரமாக அமைவதற்காகவும் தொடந்து துஆக்களை செய்து வருமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

**நாஸிர் இஸ்லாஹ்-வ-இர்ஷாது**

**காதியான்**

# நமது தலைமுறையை ஒன்று பாதுகாக்குமென்றால் அது திருக்குர்ஆன் தான்

நான் ஆராய்ந்தவரை, தினசரி திருக்குர்ஆன் ஓதப்படுகின்ற வீடுகள் மிகவும் குறைவுதான். காலையில் எழுந்தவுடன் சுப்ஹ் தொழுகைக்குப் முன்னர் அல்லது சுப்ஹ் தொழுகைக்கு பின்னர் திருக்குர்ஆன் ஓதுகின்ற குழந்தைகள் மிக அரிதாகக் காணப்படுவார்கள். இந்த ஆய்வை நான் குடும்ப சந்திப்புகளின் போது செய்தேன். பெரும்பாலான குழந்தைகளுக்கு சுப்ஹ் நேரத்தில் குர்ஆன் ஓதுவது பற்றி எதுவும் தெரியாதவர்களாகக் கண்டேன். நமது தலைமுறைகளை ஒன்று பாதுகாக்கும் என்றால் அது திருக்குர்ஆன்தான் என்ற அடிப்படை உண்மையின் பக்கம் நாம் கவனம் செலுத்த வில்லையென்றால், நான் விளக்கி வருகின்ற தர்பிய்யத் விஷயங்கள் அனைத்தும் அர்த்தமற்றவை யாகிவிடு கின்றன.

திருக்குர்ஆனில் இரண்டு விஷயமும் இருக்கின்றது. அதில் நேர்வழியும் இருக்கின்றது; சிலருக்கு நேர்வழி இல்லாமலும் போய்விடுகின்றது. எவர்கள் இறையச்சத்தை மேற்கொள்வார்களோ அவர்களுக்கு நேர்வழி இருக்கின்றது. எவர்கள் இறையச்சத்தை மேற் கொள்வதில்லையோ அவர்களுக்கு (ஸாலிகல்கிதாப்) திருக்குர்ஆன் வெகு தூரத்திலிருக்கும் வேதமாக இருக்கும். வெளிப்படையில் அவர்களுக்கு முன்னால் அவர்களை விட்டும் வெகுதூரம் விலகி நிற்கும். இறைவேதம் அருகில் வராதவரை இவ்வுலகத்தின் பிரச்சனைகளுக்கு தீர்வு ஏற்பட முடியாது.

எனவே, திருக்குர்ஆனைக் கற்றுக் கொடுப்பதில் கண்டிப்புடன் இருத்தல், திருக்குர்ஆனை ஓதுவதிலிருந்து இதை ஆரம்பித்தல் மிகவும் முக்கியமானதாகும். ஆயினும் ஓதுவதுடன், அரபிமொழியைப் பற்றி அதிகம் அறியாதவர்களாகிய இந்த சமுதாயத்தினர் அதன் பொருளையும் படிக்க வேண்டும். பொருள் சொல்லிக் கொடுப் பதற்கு என்று ஜமாஅத் அமைப்பின் பல்வேறு ஏற்பாடுகள் செயல்பாட்டில் உள்ளன.

எனினும்,அதன்மூலம் பயன்பெறுபவர் கள் மிகக் குறைவுதான். எனவேதான் நாங்கள் இந்த இடத்தில் திருக்குர்ஆன் வகுப்பை ஆரம்பித்திருக்கிறோம் என்ற அறிக்கைகளை படிக்கும்போது இந்த வகுப்பினால் ஆண்டு முழுவதும் எத்தனை பேர் பயன் அடைந்திருப்பார்கள்? என்பதைப் பற்றி நான் ஆச்சரியப்பட்டு பார்க்கிறேன். அப்படியே பயன் அடைந்தார்கள் என்றாலும் சில நாட்கள் பயன் அடைந்துவிட்ட பிறகு அந்த பயனை வீணாக்குவதில் மற்ற நேரங்களை கழித்து விடுகின்றார்கள். எந்த குழந்தைகளுக்கு திருக்குர்ஆனை கற்றுக்கொடுக்க நீங்கள் முயற்சி செய்தீர்களோ அவர்களிடம் சில நாட்களுக்குப் பிறகு கேட்டுப் பார்த்தால் அவர்கள் கற்ற அனைத்தையும் மறந்துவிட்டதை காண்பீர்கள். இதற்கு

முக்கியக் காரணம், நமது பெரியவர்கள் திருக்குர்ஆனின் பக்கம் முழுக்கவனம் செலுத்தவில்லை. நம்மில் அதிகமான பருவமடைந்த ஆண்கள் மார்க்கப் பற்றைக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் திருக்குர் ஆனின் மீது பற்றுக் கொள்ளாமல் மார்க்கத்தில் பற்றுக் கொள்ளுதல் என்பதில் எந்த அர்த்தமும் இல்லை என்பது அவர்களுக்கு அறிவுறுத்தப்படவில்லை. தற்காலிகமாக பலன்கள் இருக்கலாம். ஆனால் அவர்கள் மார்க்கத்துடன் பற்றுள்ளவர்களாக இருத்தல் மார்க்கத்திற்காக உழைத்தல் அவர்களை ஒன்று சேர்த்து திருக்குர்ஆனின் பக்கம் கொண்டு வருதல் ஆகியவைதான் அந்தப் பலன்களின் உயர்ந்த குறிக்கோளாகும்.

இந்தப் பலன்கள் இல்லையென்றால் அது வீணானவையாகும். ஏனெனில் திருக்குர் ஆனைப் பற்றிய முதல் அறிமுகம் ஸாலிகல் கிதாப் (இது அந்த வேதம்) என்பதுதான். அதாவது எந்த வேதத்தை சமுதாயங்கள் எதிர்பார்த்துக் கொண்டிருந்தனவோ அந்த வேதம். உலகம் தோன்றிய நாளிலிருந்து மனிதகுலம் இந்த வேதத்தை எதிர்பார்த்துக்கொண்டிருந்தது. ஆனால் இது வந்ததும் எத்தனை பேர் புறமுதுகு காட்டிச் சென்று விட்டார்கள்! ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களைப் பற்றி திருக்குர்ஆன் கூறுகிறது. என் இறைவா! என்னுடைய சமுதாயம் இந்தக் குர்ஆனை கைவிடப்பட்ட ஒரு வேதத்தைப் போன்று விட்டுவிட்டார்கள் என்று இந்த ரசூல் முறையீடு செய்வார். (25:31) இறைவா! என்னுடைய சமுதாயம் என்று கூறப்படுகின்ற இந்த சமுதாயம் இந்தக் குர்ஆனை தம் முதுகுக்குப் பின்னால் தூக்கி எறிந்துவிட்டார்களே! என்று எவர்களைப் பற்றி ஹஸ்ரத் ரசூல் (ஸல்) அவர்கள் கூறுவார்களோ அந்த சமுதாயமாக நீங்கள் மாறவேண்டாம்.

எனவே, இது முக்கியமான ஒன்றாகும். மேலும் இறைவணக்கத்தின் உயிர் திருக்குர் ஆன் ஆகும். இறைவணக்கத்திற்கு முன்னரும் திருக்குர்ஆன்தான் இருக்கிறது. அதாவது தஹஜ்ஜுத் நேரத்தில் முடிந்த அளவுக்கு திருக்குர்ஆன் ஓதுங்கள் என திருக்குர்ஆன் கூறுகிறது. தொழுகையிலும் திருக்குர்ஆன்தான் ஓதப்படுகிறது. தொழுகைக்குப் பிறகும் திருக்குர்ஆன் ஓதப்படுகின்றது. எனவே, திருக்குர்ஆனை ஓதும் பழக்கத்தை உருவாக்குதல் அதன் பொருள்களை கவனிக்குமாறு கற்றுக் கொடுத்தல் ஆகிய இவை தர்பிய்யத்தின் அடிப்படைத் தேவையும் தர்பிய்யத்தின் திறவுகோலும் ஆகும். இது இல்லாமல் தர்பிய்யத் நடக்கவே முடியாது.

நான்காவது கலீஃபதுல் மஸீஹ் ஹஸ்ரத் மிர்ஸா தாஹிர் அஹ்மது (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள் 4-7-97 அன்று கனடாவில் ஆற்றிய ஜுமுஆ பேருரையில்)

**M. மன்சூர் அஹ்மது**

**National Watch Company**
Opposite to Bus Stand
Somanur, Tiruppur

**Chennai Hardwares**
241, Aroct Road, Chennai 600 026.
Ph : 2473 5373

# இமாம் மஹ்தியின் நற்பண்புகள்

**மவ்லவி O.M. முஸ்ஸம்மில் அஹ்மத்**

**ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் மீது இருந்த அன்பு**

ஒரு முறை வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் காதியானிலுள்ள மஸ்ஜித் முபாரக்கில் தனியாக உலாவிக் கொண்டிருந்தார்கள். மெதுவாக ஏதோ கூறிக் கொண்டிருந்தார்கள். அத்துடன் அவர்களின் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்து கொண்டிருந்தது. அப்போது நண்பர் வெளியே வந்து செவிமடுத்த போது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் சஹாபி ஹஸ்ரத் ஹஸ்ஸான் பின் ஸாபித் (ரலி) அவர்களின் ஒரு கவிதையைப் படித்துக் கொண்டிருந்தார்கள். கண் பார்வையற்ற சஹாபி ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மரணித்த போது பாடிய கவிதைதான் அது. அதன் பொருள் : "(நபியே) தாங்கள் தான் என் கண்ணின் கரு விழியாக இருந்தீர்கள். தாங்கள் இறந்ததால் என் கண்கள் குருடாகிவிட்டன. தங்களுக்குப் பிறகு யார் வேண்டுமானாலும் மரணிக்கட்டும். தங்களின் மரணத்தைப் பற்றியே நான் அச்சப்பட்டுக் கொண்டிருந்தேன்".

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மேற்கண்ட அரபி கவிதையைப் படித்து கொண்டுதான் கண்ணீர் வடித்துக் கொண்டிருந்தார்கள். மேலும் அந்தோ! இந்தக் கவிதை என் வாயிலிருந்து வந்திருக்கக் கூடாதா என ஏக்கத்துடன் கூறினார்கள்.

இது மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்களுக்கு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மீது இருந்த அளவற்ற நேசத்தை காட்டுகிறது.

ஆரிய சமாஜத் தலைவர் பண்டித லேக் ராம் என்பவர் ஒரு முறை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் சலாம் கூறினார். அதை அவர்கள் கண்டு கொள்ளவில்லை. பண்டித் லேக் ராம் மறுபக்கம் வந்து மீண்டும் ஒரு முறை சலாம் கூறினார். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் அவர்கள் அதைப் பொருட்படுத்தவில்லை. இதைக் கண்ட தோழர்கள், ஹுஸூர்! பண்டித் லேக் ராம் தங்களுக்கு சலாம் கூறினார் எனத் தெரிவித்தனர். அப்போது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள், அவர் நமது எஜமானரும் தலைவருமாகிய ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களை ஏசுகின்றார். நமக்கு சலாம் கூறுகின்றாரா? என்றார்கள்.

இதுவும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மீது அவர்கள் வைத்திருந்த கண்ணியத்தையும் மதிப்பையும் வெளிப்படுத்துகின்றது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் மகன் மிர்ஸா சுல்தான் அஹ்மது (ரலி) அவர்கள் தாம் கண்ட அனுபவத்தை இவ்வாறு குறிப்பிடு கிறார்கள்:

"ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹிடம் குறிப்பாக நான் ஒன்றை கண்டிருக்கிறேன். எவராவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பற்றி கொஞ்சம் தவறாகப் பேசினாலும் அவர்களால் தாங்கிக் கொள்ள முடியாது. எவராவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மகிமைக்கு மாறாக எதைக் கூறினாலும் அவர்களின் முகம்

**தொடர்ச்சி 22-ம் பக்கம்...**

# தீர்க்கதரிசியும், தேவகுமாரனும்

**ஹஸன் அபூபக்கர்**

முன்னுரை:

இயேசு கிறிஸ்து, இஸ்ரவேல் மக்களுக்கு மத்தியில் போதித்து வந்தார் என்று யூதர்களும், கிறித்தவர்களும், முஸ்லிம் களும் கூறி வருகின்றனர். இவர்களின் யூதர்கள் அவரை மேசியாவாக ஏற்றுக் கொள்ளாமல், சிலுவையில் அறைந்து அவமதித்து மகிழ்ந்தனர். கிறித்தவர்கள் அவரை தேவன் மற்றும் தேவகுமாரன் என்ற நிலைக்கு உயர்த்தி விட்டார்கள். முஸ்லிம்களோ, திருக்குர்ஆனின் இறை தூதர் என்கின்றனர். இயேசுவின் உண்மைநிலை குறித்துப் பேசும் இக்கட்டுரையில் தீர்க்கதரிசி மற்றும் தேவகுமாரன் என்ற சொற்களில் உண்மைப் பொருள் குறித்து எடுத்துக் கூறப்பட்டுள்ளதேயன்றி, (இச்சொற்களின் அடிப்படையில்) இயேசுவின் வாதம் குறித்து எந்த ஆய்வும் இங்கு மேற்கொள்ளப் படவில்லை என்பதை மனதில் கொள்ள வேண்டுகிறேன்.

**தீர்க்கதரிசி**

தாம் ஒரு மேசியா என்று யூத மக்களுக்கு இயேசு அறிவிக்கும்போது, தாம் ஒரு தீர்க்கதரிசி என்று அறிவிப்பதைவிட அதிகக் கவனத்துடன் நடந்து கொண்டார் என்றே கூறவேண்டும். ஏனெனில் கிளர்ச்சி செய்யும் ஒரு மேசியாவை உற்றுநோக்கி, அவரிடம் கவனம் செலுத்தும் அளவுக்கு ஒரு தீர்க்கதரிசியைப் பற்றி ரோமானியர்கள் அதிக அக்கறை எடுத்துக்கொள்ள மாட்டார்கள். பாலஸ்தீனத்தில் தீர்க்கதரிசிகளுக்கோ அவர்களின் போதனைகளுக்கோ கொஞ்சமும் பஞ்சமில்லை. ஆகவே, மற்றொரு தீர்க்கதரிசி பாலஸ்தீனத்தில் அவதரிப்பதால் ஆளும் வர்க்கமான ரோமானியர்களிடத்தில் எந்த வித்தியாசமும் ஏற்பட்டு விடாது.

சுவிசேஷங்களும் இயேசுவை அதிகளவில் ஒரு தீர்க்கதரிசியாகவே எடுத்துக்காட்டு கின்றன. அதனால் மேசியா என்ற அவரது வாதம் ஓர் இரண்டாம் இடத்துக்குத் தள்ளப்பட்டுள்ளதாகவே நாம் காண்கிறோம். தீர்க்கதரிசி என்ற அவரது வாதம் கூட நேரிடையாக அவரால் மக்கள் முன் எடுத்து வைக்கப்படவில்லை. **மேலும் சுவிசேஷத்தில் எந்த ஓர் இடத்திலும் தாம் ஒரு தேவகுமாரன் என்று ஒருமுறை கூட ஏன் ஒரு வார்த்தை கூட இயேசு கூறவில்லை.** ஆனால் அவரைக் குறித்துப் பல்வேறு இடங்களில் சுவிசேஷங்கள் எடுத்துக் கூறுவதை நாம் காண்கிறோம். அவரை ஒரு தீர்க்கதரிசி என்றும், இறைவனின் உண்மையான தூதர் என்றும், நாம் அங்கீகரிக்காவிடில் அவ்வசனங்களுக்கு எந்த ஓர் அர்த்தமும் இல்லாமல் போய்விடும். **தீர்க்கதரிசி** ஒருவன் தன் ஊரிலும், தன் இனத்திலும் தன் வீட்டிலுமே அன்றி வேறெங்கும் கனவீனமடையான்' என்றும் (மாற்கு6:4), தண்டனைக்கு ஆளான தமது சீடர்களுக்கு இயேசுபிரான் ஆறுதல் கூற முனையும்போது, உங்களுக்கு முன்னிருந்த **தீர்க்கதரிசி களையும்** அப்படியே துன்பப்படுத்தினா ர்களே என்றும், (மத்தேயு 5:12) அவர்களுக்கு உறுதியளித்து '**தீர்க்கதரிசி** என்னும் நாமத்தினிமித்தம் தீர்க்கதரிசியை ஏற்றுக்கொள்கிறவன் தீர்க்கதரிசிக்கேற்ற பலனை அடைவான் என்றும் (மத்தேயு 10:41) எருசலேமில் அவரை உற்சாகத்துடன் வரவேற்ற கூட்டத்தினர் 'இவர்

கலிலேயாவில் உள்ள நாசரேத்திலிருந்து வந்த **தீர்க்க தரிசியாகிய இயேசு'** என்றும் (மத்தேயு 21:11) நாயீன் மக்கள் தேவனை மகிமைப்படுத்தி, மகா **தீர்க்கதரிசி** ஆனவர் நமக்குள்ளே தோன்றியிருக்கிறார்' என்றும் (லூக்கா7:16) இயேசுவைச் சிறைப்பிடிக்க நாடிய மக்களுக்குப் பயந்து பிரதான ஆசாரியரும், பரிசேயரும் 'ஜனங்கள் அவரைத் **தீர்க்க தரிசியென்று** எண்ணினபடியினால் அவர்களுக்குப் பயந்திருந்தார்கள்' என்றும், (மத்தேயு21:46) கூறப்பட்டுள்ளதை எடுத்துக்காட்டாகக் கொள்வோம். இவையாவும் இவ்வுண்மைக்கு விரிவுரையாக அமைந்துள்ளன. பிந்தைய காலத்தில் வரலாற்றின் பக்கங்களில் இயேசுவின் உண்மையான பதவி, மேற்கண்டவாறு யூதத் தீர்க்கதரிசி என்ற அவரது அந்தஸ்தைவிட அதிக அளவில் உயர்த்தப்பட்டு விட்டது. ஆனால் அது பிற்காலத்திய அதிகப்படியான பிற்சேர்க்கையே ஆகும். இயேசுவோ, அவரை மிக நெருக்கமாக நன்கறிந்த வர்களோ இந்த அதிகப்படியான பிற்சேர்க்கைக்குப் பொறுப்பாளியக இருக்க முடியாது.

**தேவகுமாரன்**

நாம் எடுத்துக்கொண்ட பொருளின் முக்கியத்துவம் கருதி இக்கருத்தினை நாம் மீண்டும் மீண்டும் வலியுறுத்த வேண்டியுள்ளது. **இயேசு தம்மை தேவகுமாரன் என்று அழைத்ததாக சுவிசேஷங்களில் - ஏன், முழுப்புதிய ஏற்பாட்டிலும் - எவ்வித ஆதாரமும் இல்லை.** தேவாலய மேடைகளிலிருந்து தாம் கேள்விப்பட்ட விவரங்களையும், வீதி ஓரங்களில் உரக்கக் கூச்சலிடும் கிறித்தவ மத போதகர்களின் பேச்சுக்களையும் இயேசுவின் வாழ்க்கை என்றும் அவரது போதனை என்றும் எண்ணிக் கொண்டிருக்கும் நல்ல உள்ளங் கொண்ட கிறித்தவர்களுக்கு இச்செய்தி பெரும் ஆச்சரியத்தைத் தரலாம். ஆனால், சுவிசேஷங்களை முழுமையாகப் படித்துப் பார்த்தால், **இயேசு தம்மைக் குறித்துப் பேசும்போது தேவகுமாரன் என்ற சொல்லை ஒருபோதும் பயன்படுத்த வில்லை** என்பது திட்டவட்டமான உண்மையாகும் என்பதைப் புரிந்து கொள்ளலாம். தம்மைப் பற்றி தேவகுமாரன் என்று சொல்வதற்குப் பதிலாக தம்மை மனிதகுமாரன் என்றே அவர் வலியுறுத்திக் கூறியுள்ளார். சுவிசேஷங்களில் அவர் இவ்வாறு மனித குமாரன் என்று கூறியதாக 81 இடங்களைக் காட்டலாம். சிலநேரங்களில் ஒரே வாக்கியத்தில் ஒன்றுக்கும் மேற்பட்ட முறை அவ்வாறு கூறியதும் உண்டு. 'நான்' என்ற எளிய பிரதிப் பெயர்ச்சொல்லைப் பயன்படுத் தாமல், 'மனித குமாரன்' என்ற சொல்லை அவர் 'படர்க்கையில்' பயன்படுத்தியதற்குத் தகுந்த காரணம் இருக்கிறது. அவரைச் சூழ்ந்திருந்த பல தெய்வக் கொள்கைக் காரர்கள், எதிர்காலத்தில் ஒருநாள் தம்மை தேவகுமாரனாக்கி விடுவார்கள் என்ற உள்ளுணர்வு அவருக்கு இருந்திருக்கிறது. தமது காலத்தில் அவர்கள் தமக்கு எதிரிகளாயிருப்பினும் தேவனுடைய பிள்ளை என்ற அத்தகைய இறை நிந்தனை உருவாகும் முன்னர், தம்மை அதிலிருந்து முழுமையாக அப்புறப்படுத்திக் கொள்ளவும் அவர் விரும்பியிருக்கிறார். **புதிய ஏற்பாட்டில் எங்கெல்லாம் அவரைக் குறித்து தேவகுமாரன் என்று குறிப்பிடப்பட்டுள்ளதோ அவையாவும் மற்றவர்கள் சொன்னதே தவிர இயேசு சொன்னவை அல்ல.**

**பிதா**

சில வேளைகளில் அவர் தேவனைக்

குறித்துத் தமது பிதா என்று கூறியுள்ளார் என்பது உண்மையே. ஆனால் அவர் பலமுறை தேவன் தமது மலையுச்சிச் சொற்பொழிவில் மட்டும், உங்கள் பிதா, உன் பிதா, பரலோகத்தில் இருக்கிற உங்கள் பிதா போன்ற சொற்களை பதினைந்து முறைகளுக்கும் அதிகமாக உபயோகப் படுத்தியுள்ளார். அதே நேரத்தில் அந்தச் சொற்பொழிவில் என் பிதா என்று ஒரே ஒருமுறை மட்டுமே கூறியுள்ளார்.

நமது அன்பிற்குரிய வாசகர்கள் இவ்விடத்தில் எந்தத் தப்பபிப்பிராயமும் கொள்ளக்கூடாது என்பதற்காக, இயேசு தேவனுக்குக் குமாரனாய் இருப்பதும், இயேசு கிறிஸ்து தேவனைத் தமது பிதா எனக்கொள்வதும் ஒன்றல்ல என்பதை இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். உயிரியல் நோக்கில் இவ்விரண்டும் ஒரே உறவினைக் குறிக்கலாம். ஆனால் ஆன்மீகப் பார்வையில் அது சரியல்ல. இயேசு பலமுறை தேவனைத் தமது பிதா என அழைத்திருந்தாலும், தம்மை தேவகுமாரன் என்று குறிப்பிடுவதை வேண்டுமென்றே தவிர்த்து வந்துள்ளார். ஆகவே, எப்போதேனும் இயேசு தம்மை தேவகுமாரன் என்று சொல்லியிருப்பதாய் ஒரு வாதத்திற்காக ஏற்றுக்கொண்டாலும், **தேவகுமாரன் என்ற சொல் தமக்கு மட்டுமே பொருந்தும்; வேறு எவருக்கும் பொருந்தாது என்று அவர் அதற்கு ஒருபோதும் பொருள் கொடுக்கவில்லை.**

இயேசுவின் கருத்துப்படி (சமய போதகர்கள் எல்லாருடைய கருத்தும் இதுதான்) நாம் எல்லாரும் தேவனின் குமாரர்களே. (அதாவது கடவுளின் பிள்ளைகளே). தேவனே நம்மைப் படைத்துள்ளதால், நாம் அனைவரும் அவனது பிள்ளைகளேயாவோம். படைத்தவனுக்கும் படைப்பினமாகிய மனிதனுக்கும் இடையேயுள்ள இந்த அடிப்படை உறவை எவரும் மறுப்பதற் கில்லை. உண்மையில், தேவனின் பார்வையில் நாம் எல்லாரும் ஒரே சம நிலையில் வைத்துப் பார்க்கப்படுகிறோம் என்பது இதன் பொருள் அல்ல. எந்த அளவுக்கு அதிகமாக அல்லது குறைவாக தேவன் நம்மை நேசித்து நம்மீது அக்கறை காட்டுகிறான் என்பது, நாம் அவனை எவ்வாறு அணுகுகிறோம்; நாம் எவ்வாறு நடந்து கொள்கிறோம் என்பதையே பொருத்தது. மனிதர்கள் தேவனைப் பொருட்படுத்தாவிட்டால் அவன் ஏன் மனிதர்களிடம் அக்கறை காட்ட வேண்டும்? திருக்குர்ஆன் இப்படித்தான் கூறுகிறது. (25:78)

**பிதா-குமாரன் உறவு**

உடல் ரீதியில் தந்தை மகன் உறவுக்கும் இதுவே பொருந்தும். ஒரே பெற்றோரின் குழந்தைகள் கூட அந்தக் குடும்பத்தில் ஒரே நிலையை அல்லது முக்கியத் துவத்தைப் பெறுவதில்லை. பிள்ளைகளின் நல்லொழுக்கச் செயல்பாடுகளும், அறிவுப் பூர்வமான நடத்தைகளும் மட்டுமன்றி, குடும்பத்தினருக்கும் வெளி உலகிற்கும் அப்பிள்ளைகள் ஆற்றும் ஊழியமும் வேறுபடுகிறது. இதனால் அவர்களுக்குக் கிடைக்கும் அங்கீகாரமும் வேறுபடுகிறது. ஏன், மரியாளையும், அவரது பிள்ளை களையும் எடுத்துக் கொள்ளுங்களேன். அவரது பிள்ளைகள் அத்தனை பேரும் ஒரே அந்தஸ்தை அடைந்தார்களா? இல்லையே அவரது ஐந்து ஆண்பிள்ளைகளில் ஒருவர் மேசியாவாக ஆகிவிட்டார். மற்றொருவர் பெற்றதோ, எருசலேமிலுள்ள அப்போஸ்தலர் சபையின் தலைவர் என்ற உயர்ந்த நிலை. ஆனால் மீதிப்பேர் குறிப்பிடத்தக்க அளவில் பேசப்படவில்லையே!

ஒரு நூறு ஆண்டுகளுக்குப் பின்னர் யூதாவின் பேரப்பிள்ளைகள் சிறு விவசாயிகளாக இருந்தனர் என்பதைத் தவிர அவர்களைப் பற்றி நமக்கு எதுவும் தெரியவில்லை. (ரைட்.ரெவ.ஆர்தர்.சி. ஹெட்லேம்-தி லைஃப் அண்ட் டீச்சிங்ஸ் ஆஃப் ஜீசஸ் தி கிரைஸ்ட் பக்கம்96) இந்த யூதா இயேசுவின் கடைசி சகோதரர் ஆவார். (மத்தேயு 13:55) இருப்பினும் அவர்கள் அனைவரும் மரியாளின் குமாரர்கள்; மரியாளே பெற்றெடுத்த பிள்ளைகள். ஒருவருக்கு இரு பிள்ளைகள் இருந்து அவர்களில் ஒருவன் நல்லவனாகவும், மற்றொருவன் ஒன்றுக்கும் உதவாதவனாகவும் இருந்தால், இயல்பாகவே நல்லவனான அவனை அவர் அதிக அளவில் நேசிப்பார் அல்லவா? இது தவறென்றோ, நியாயமற்றதென்றோ நீங்கள் கூற மாட்டீர்கள். ஆனால் இவ்விடத்தில் நாம் பார்க்கவேண்டிய முக்கியமான கருத்து என்னவென்றால், எந்த அளவுக்குத் தகுதியற்றவனாகவும், விசுவாச மற்றவனாகவும் அந்த மகன் இருந்தாலும், அவன் அவரது மகனாகவே இருக்கிறான். அவரது மகனாகவே தொடர்ந்து நீடிப்பான். ஏனெனில், அவனை அவர் பெற்றெடுத்து விட்டதால், தவிர்க்க முடியாதவாறும், என்றென்றைக்கும் மாறாதவாறும், அவருக்கு அவன் மகன் என்பது ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டு விட்டது. அவனது தந்தை அவனை கைவிட்டு விடலாம். ஆனால் அவன் தனது மகன் இல்லை என்று ஒருபோதும் அவரால் கூறமுடியாது. கடந்த காலத்தில் நடந்து முடிந்துவிட்டதை அவரால் மாற்ற முடியாது.

இதைப் போன்றதே, இறைவனோடு நமக்குள்ள உறவும். உண்மையில் இயேசு தேவனின் குமாரன் என்பதைப் போல, நாம் எல்லாரும் தேவ குமாரர்களே. ஒரே ஒரு விதிவிலக்கு மட்டுமே உண்டு. அதாவது இயேசு எய்தியிருந்த நல்லொழுக்க ஆன்மீக உயர்நிலையில், நூற்றில் ஒரு பங்கு கூட நம்மில் ஒருவரும் பெற்றிருக்கவில்லை. எனவே, இறைவனுக்கும் நமக்குமிடையே உள்ள உண்மையான வித்தியாசம், நற்பண்புகள் சம்பந்தப்பட்டதே தவிர, இயேசு தேவகுமாரன் என்பதால் வந்தது அல்ல. இது நம் அனைவருக்கும் ஒரு பொதுவான அம்சம் அல்லவா? இந்த புத்திப்பூர்வமான எளிய உண்மையை திரித்துக்கூறி, இவ்வுண்மையை மறுப்பதற்காக பல நூறு ஆண்டுகளாக திருச்சபையின் முழு அதிகார பீடமும் முடுக்கிவிடப்பட்டுள்ளது. இச்செயல்பாடு மனித இன வரலாற்றில் நிகழ்ந்த மாபெரும் துயரச் சம்பவமாகும் என்பதையும் இங்கு வருத்தத்துடன் குறிப்பிட வேண்டியதுள்ளது.

தகப்பன் மகன் ஆகிய இருவரைக் குறித்துப் பேசும்போது, மகன் தகப்பனிடமிருந்து தோன்றியுள்ளார் என்றே நாம் கருதுகிறோம். இவ்விடத்தில் இவ்விருவருக்கும் உள்ள முதன்மையான உறவு உடலைப் பொருத்தது; அல்லது உயிரைப் பற்றியது. மற்றெல்லா உறவுகளும், தொடர்புகளும் இந்த அடிப்படை உறவிலிருந்தே தோன்றுகின்றன. தந்தை - மகன் உறவின் அடிப்படையில் திருச்சபைத் தந்தைமார்கள், மண்ணின் மைந்தர்கள், விடுதலை மாந்தர்கள், தேசப் பிதா போன்ற சொற்கள் ஒரு மொழிக்கு அழகூட்டும் வகையிலேயே அமைந்துள்ளன. இரு நபர்களுக்கிடையில் அல்லது இரு நிலைகளுக்கிடையில் உள்ள உறவை எடுத்துரைப்பதையும் உடல் ரீதியான தந்தை மகன் உறவு போல இச்சொற்கள் அமைந்துள்ள போதிலும்,

இவ்வுறவுகளுக்கு உடல் ரீதியான தொடர்பு ஏதும் இல்லை என்பதை எடுத்துச் சொல்வதையும் எவரும் எளிதில் புரிந்து கொள்ளவே செய்கிறார்கள்.

இயேசு தேவனின் குமாரன் என்பதும் இவ்வகையைச் சேர்ந்ததே. உண்மையில் இயேசுவை தேவகுமாரன் என்று கூறுவோர் கூட மரியாள் அவரது தாயார் என்று கூறுவதைப் போல தேவன் அவரது தந்தை என்று கூறுவதில்லை. உவமான வடிவத்தில் கூட தேவன் அவரது உண்மையான தந்தை என்று நாம் கூறுவதில்லை. இயேசு, தேவன் பெற்றெடுத்த மகன் என்பது கொடிய பிழையாகும். உருவக வடிவில் தேவன் அவரது பிதா எனக்கூறுவது தேவனை மனித அளவுக்குக் கீழே இறக்குவதாக இருப்பினும், கிறித்தவ பிரச்சாரகர்கள் இயேசு தேவனின் மகனாகப் பிறந்ததாகவே தொடர்ந்து கூறிக்கொண்டிருக்கிறார்கள். மீண்டும் மீண்டும் வலியுறுத்திக் கொண்டே இருந்தால் ஒரு மூட நம்பிக்கை கூட பொருள் உள்ளதாக ஆகி விடும் என அவர்கள் கருதுகிறார்கள் போலும்!

இயேசு தம் வாயால் தம்மை தேவகுமாரன் என்று ஒரு போதும் கூறவில்லை என்ற போதிலும், புதிய ஏற்பாட்டில் மற்றவர்கள் அவரைக் குறித்து அவ்வாறு குறிப்பிடுகிறார்கள் என்பதை முன்னரே கண்டோம். உண்மை இவ்வாறிருந்தும் பழைய ஏற்பாட்டில் அநேகர் கர்த்தரால் தேவகுமாரன் என்று அழைக்கப்பட்டு ள்ளதை என்னவென்பது? எடுத்துகாட்டாக, கர்த்தர் கூறியுள்ளதாவது; ‘இஸ்ரவேல் என்னுடைய குமாரன், என் சேஷ்டபுத்திரன்.’ (யாத்திராகமம் 4:28)

தாவீதைக் குறித்து கர்த்தர் இவ்வாறு கூறியுள்ளார்: ‘நான் அவனுக்குப் பிதாவாய் இருப்பேன். அவன் எனக்குக் குமாரனாய் இருப்பான்.’ (1 நாளாகமம் 17:13)

சாலமோனும் கர்த்தரால் தேவனின் குமாரன் என்றே அழைக்கப்பட்டுள்ளார்: ‘நீர் என் குமாரன்.’ (சங்கீதம் 2:7) இவ்வாறு தத்தமது மக்களுக்கு இஸ்ரவேலும் தாவீதும் சாலமோனும் **தேவகுமாரன்** என்றே சுட்டிக் காட்டப்பட்டுள்ளார்கள். உண்மையில் பைபிளின் கூற்றுப்படி மக்கள் அனைவரும் அதாவது கெட்ட மனிதர்கள் உள்பட, தேவ குமாரர்கள் தேவனின் பிள்ளைகள், என்றே எடுத்துரைக்கப்பட்டுள்ளார்கள். கெட்ட மனிதர்கள் என்று பிரித்தறியப் பட்டுள்ளார்களேயன்றி, அவர்களும் தேவகுமாரர்களே ஆவர். (உபாகமம் 14:1, ஏசாயா 30:1, ஓசியா 1:10)

‘இஸ்ரவேலுக்கு நான் பிதா; எப்பிராயீம் என் ஜேஷ்ட குமாரன்.’ (எரேமியா 31:9) இஸ்ரவேலை ஜேஷ்ட புத்திரனாகக் கண்ட நமக்கு எப்பிராயீமும் ஜேஷ்டபுத்திரனா என்ற ஐயம் எழுவது இயல்புதான்.

‘நீங்கள் உங்கள் கடவுளாகிய கர்த்தருடைய பிள்ளைகள்’ (உபாகமம் 14:1)

புதிய ஏற்பாட்டிலுள்ள ரோமர் 8:29 வசனம் பொதுமக்களையும் ஜேஷ்ட புத்திரர்களாகக் காட்டுகின்றது. இவ்வாறு பைபிள் நெடுகப் பரவியுள்ள ‘தேவகுமாரன்’ பற்றிய உண்மையை அதாவது அது உவமையாகக் கூறப்பட்டதுதானே தவிர நேரடிப் பொருளில் அல்ல என்பதை எவரும் எளிதில் பார்த்துத் தெளிவடையலாம்.

### தேவகுமாரன் சரியான பொருள்

எல்லாவற்றுக்கும் மேலாக தேவகுமாரன் என்ற சொல்லுக்கு இயேசுவே மிகத்தெளிவான வரையறை ஒன்று வழங்கியுள்ளார். இயேசு தம்மை தேவனாக்கிக் கொண்டார் என்று யூத மக்கள் இயேசுவின் மீது குற்றம் சுமத்தியபோது, அவர்களின் வேத நூல் வார்த்தையையே

சுட்டிக்காட்டி இயேசு அவர்களுக்கு பதிலுரைத்ததை இங்கு நாம் நினைத்துப் பார்ப்பது நல்லது. இதோ இயேசுவின் பதிலுரை:

''இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக, தேவர்களாயிருக்கிறீர்கள் என்று நான் சொன்னேன் என்பதாய் உங்கள் வேதத்தில் எழுதியிருக்கவில்லையா? தேவ வசனத்தைப் பெற்றுக்கொண்டவர்களை தேவர்கள் என்று, அவர் சொல்லியிருக்க, பிதாவினால் பரிசுத்தமாக்கப்பட்டும், உலகத்தில் அனுப்பப்பட்டும் இருக்கிற நான் என்னைத் தேவனுடைய குமாரன் என்று சொன்னதினாலே தேவதூஷணஞ் சொன்னாய் என்று நீங்கள் சொல்லலாமா?'' (யோவான் 10:34-36)

இவ்வாறு இயேசுபிரான் யூத மக்களுக்கு, 'தேவகுமாரன்' என்ற சொல்லுக்குரிய சரியான பொருளை எடுத்துரைத்திருக்கிறார். அதாவது தேவன் அவரைப் பரிசுத்தமாக்கி இவ்வுலகிற்கு அனுப்பி வைத்ததாலேயே இயேசு தம்மை தேவகுமாரன் என்று கூறியதாகவும், இப்பதவி தம்மைப் போன்று தகுதி படைத்தோர் அனைவருக்கும் ஒன்று போலவே பொருந்தும் என்றும் அவர் மிகத்தெளிவாக எடுத்துக்கூறிவிட்டார். பெருமளவில் பேசப்பட்ட, தவறாகப் புரிந்து கொள்ளப்பட்ட (தேவகுமாரன் என்ற) ஒரு சொல்லுக்கு இயேசுவே முன்வந்து அளித்த விளக்கமாகும். இது அவரைப் பின்பற்றியோர் இதனைத் திரித்திக் கூறி அவரது வருகையின் நோக்கத்தையும் முழுப் போதனையின் சாரத்தையும் தோற்கடிக்கும் குற்றத்திற்கு ஆளாவது எவ்வளவு பெரிய துரதிருஷ்டமாகும்!

இப்போது பைபிள் கூறும், தேவகுமாரன் என்ற சொல்லின் சரியான பொருளைத் தெரிந்துக் கொண்டீர்கள் அல்லவா? தேவகுமாரன் என்னும் தீர்க்கதரிசியே (இறைதூதரே) இயேசுபிரான் ஆவார் என்பதில் ஐயமில்லை. திருக்குர்ஆன் கூறும் உண்மையும் அதுவே.

---

**16-ம் பக்க தொடர்ச்சி...**

சிவந்து விடும். கோபத்தால் கண்கள் மாறிவிடும். உடனே அந்த சபையிலிருந்து எழுந்து சென்று விடுவார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது எந்த அளவுக்கு அன்னாருக்கு பாசம் இருந்ததோ அந்த அளவுக்கு பாசத்தை நான் வேறு யாரிடமும் கண்டதில்லை". (சீரத்துல் மஹ்தி தொகுதி 1 பக்கம் 200)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மீது தமக்கிருந்த அன்பை, நேசத்தை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஒரு கவிதையில் குறிப்பிடுகிறார்கள். அதன் பொருள்:

அல்லாஹ்வுக்கு அடுத்தபடியாக என் உள்ளத்தில் ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களின் மீதுள்ள அன்புதான் மிக அதிகமாக இருக்கிறது. உங்கள் பார்வையில் இது குஃப்ர் என்றால் இறைவன் மீது ஆணையாக! நான் (இந்த பொருளில்) மிகப் பெரிய காஃபிராவேன்.

இமாம் மஹ்தியாகவும், வாக்காளிக்கப்பட்ட மஸீஹாகவும் தோன்றிய மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்களின் வாழ்க்கைச் சம்பவங்களை நேர்மையான கண்ணோட்டத் துடன் படித்து அஹ்மதிய்யல்லாதாரும் அவர்களின் உண்மை யை உணர்ந்து கொள்ளும் நல்வாய்ப்பை இறைவன் வழங்குவானாக. ஆமீன்.

# ஈது பெருநாள் விருந்து நிகழ்ச்சி

கடந்த 27-09-2009 அன்று மாலை 6 மணி அளவில் சென்னை அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் சார்பாக ஈது பெருநாளை ஒட்டி சிறப்பு விருந்து நிகழ்ச்சி நடத்தப்பட்டது. இந்நிகழ்ச்சிக்கு தமிழக வடமண்டல அமீர் ஜனாப் M. பஷாரத் அஹ்மது அவர்கள் தலைமையேற்றார்கள். இந்நிகழ்ச்சிக்கு பல்வேறு மதத்தினைச் சார்ந்த அறிஞர் பெருமக்களும் அழைக்கப்பட்டிருந்தனர். இவர்களில் சன் தொலைக்காட்சியில் நேருக்கு நேர் நிகழ்ச்சியை நடத்தும் திரு. திருவீரபாண்டியன், தமிழன் தொலைக்காட்சி நிர்வாக இயக்குனர் திரு. கலைகோத்துதயன் வழக்கறிஞர் திரு. சந்திரராஜ் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். இந்நிகழ்ச்சியின் துவக்கத்தில் மவ்லவி சுல்தான் மொய்தீன் ஸாஹிப் திருக்குர்ஆனின் சில வசனங்களை ஓதி அதன் பொருளைக் கூறினார். அடுத்து மாணவர் O.M. ஷாஹித் அஹ்மது உருது மொழியில் கவிதை பாடினார். அதனைத் தொடர்ந்து மவ்லவி O.M. முஸ்ஸம்மில் அஹ்மது அவர்கள் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தை பற்றி வருகைத் தந்தவர்களுக்கு விளக்கமாக எடுத்துக்கூறினார். வருகை தந்த சிறப்பு விருந்தினர்களை கௌரவிக்கின்ற வகையில் இந்நிகழ்ச்சிக்குத் தலைமை ஏற்றிருந்த அமீர் சாஹிப் அவர்கள் பொன்னாடை போர்த்தி நினைவுப் பரிசினை வழங்கினார். பின்னர் தலைமை உரை நிகழ்த்திய தமிழக வடமண்டல அமீர் ஜனாப் M. பஷாரத் அஹ்மது அவர்கள் தமது உரையில் இன்றைய காலத்துல் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்திற்கு எதிராக அதன் எதிரிகள் கொடுத்து வருகின்ற துன்பங்கள் துயரங்களை எடுத்துக் கூறி அந்த நிகழ்வுகளை வெற்றிப் படிக்கட்டுகளக மாற்றி அமைத்து இன்று ஊடகங்கள் வாயிலாக உண்மை இஸ்லாத்தின் உயரிய போதனைகளை அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் வழங்கி வருகிறது எனக் கூறி மாநபி (ஸல்) அவர்களின் வாழ்வின் பல்வேறு நிகழ்வுகளை தமது உரையில் எடுத்து கூறினார். அடுத்து உரை நிகழ்த்திய தமிழன் தொலைக்காட்சி நிருவாக இயக்குனர் திரு. கலைகோர்த்துதயன் தமது உரையில் அஹ்மத்திய்யா முஸ்லிம் ஜமாஅத் கூறுகின்ற இஸ்லாம் இயற்கைக்கு ஒத்துப்போகின்றது. ஈசா (அலை) அவர்களின் மரணத்தைப் பற்றியும் மாநபி (ஸல்) அவர்களின் உண்மை இஸ்லாத்தை எடுத்துக் கூறுகின்றது. எனக்கு கடவுள் நம்பிக்கை இல்லை என்றாலும் இவர்களது கொள்கைக்கு எதிராக நான் கூறுவதற்கில்லை என கூறினார். அடுத்து திரு. சந்திரராஜ் தமது உரையில் இஸ்லாம் வழங்குகின்ற சுதந்திரத்தைப் பற்றியும் அஹ்மதிகளுக்கு எதிராக அச்சுதந்திரத்தில் தலையிட்டு நீதித்துரைக்கு சென்றுள்ள பல வழக்குகளைப் பற்றி எடுத்துக்கூறினார். இறுதியாக உரை நிகழ்த்திய சன் தொகக்காட்சியை சார்ந்த திரு. திருவீரபாண்டியன் அவர்கள் தமது உரையில் திருக்குர்ஆனின் வசனமான **''அல்லாஹ்வின் கயிற்றைப் பற்றிப் பிடியுங்கள்''** என்ற வசனத்தை மையமாகக் கொண்டு இன்று முஸ்லிம்கள் பல்வேறு பிரிவுகளாக பிரிந்துக் கிடக்கின்றனர். இவர்கள் ஒன்றுபட வேண்டும் என வலியுறுத்திக் கூறினார். இறுதியாக சென்னை மஜ்லிஸ் அன்சாருல்லாஹ்வின் தலைவர் ஜனாப் M. நயீம் அஹ்மது அவர்கள் நன்றியுரைக் கூறினார். அமீர் சாஹிப் அவர்கள் துஆச் செய்து இந்நிகழ்ச்சியை நிறைவு செய்தார்கள். வருகைத் தந்த சிறப்பு விருந்தினர்கள் அங்கு நடந்த விருந்து நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

**- இப்னுஷா**

**NABI VAZHI** **Tamil Monthly October 2009**

**Registered with the Registrar of News Paper of India at No.TN/TAM/05/15211**

# முஸ்லிம் தொலைக்காட்சி அஹ்மதிய்யா இண்டர்நேஷனல் (MTA)

இஸ்லாமிய போதனைகளை உலக மக்களுக்கு எடுத்துரைப்பதற்காகவும், உலக அமைதியை நிலைநாட்டவும், மத நல்லிணக்கத்தை ஏற்படுத்தவும் உருவாக்கப்பட்ட தொலைக்காட்சிதான் முஸ்லிம் டெலிவிஷன் அஹ்மதிய்யா **(MTA)** என்னும் செயற்கைகோள் ஒளிபரப்பு.

இந்த செயற்கைகோள் ஒளிபரப்பு 24 மணி நேரமும் தனது நிகழ்ச்சிகளை ஒளிபரப்புகின்றது. திருக்குர்ஆன் விளக்கவுரை, நபி மொழிகள், திருக்குர்ஆன் வகுப்புகள், காலத்தின் கலீஃபா அவர்கள் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையிலும் ஆற்றும் ஜுமுஆ பேருரைகள், மார்க்க கேள்வி-பதில் நிகழ்ச்சிகள், வினாடி வினா நிகழ்ச்சி, மார்க்க அறிஞர்களின் சொற்பொழிவுகள் ஆகியவை முஸ்லிம் டெலிவிஷன் அஹ்மதிய்யாவில் ஒளிபரப்பப்படுகின்றன.

'அராபியர்களுடன் சந்திப்பு' என்ற நிகழ்ச்சியும் **MTA**-வில் ஒளிபரப்பப்படுகிறது. இதில் அராபியர்கள் கேட்கும் கேள்விகளுக்கு கலீஃபா அவர்கள் பதில் கூறுகிறார்கள். இந்நிகழ்ச்சி அரபு நாடுகளில் பிரபலமாகி வருவதுடன் இதைக் காணும் அராபியர்களின் எண்ணிக்கையும், ஆர்வமும் பெருகி வருகின்றது.

டிஷ் ஆன்டன்னா மூலமாக **MTA** நிகழ்ச்சிகளைக் காணலாம். விவரம் கீழே தரப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Satellite | : | Asia Sat 3S | Position | : | 105.5° East |
| Frequency | : | 3760 mhz | MID Dish size | : | 1.8 metre |
| Polarisation | : | Horizontal | Symbol Rate | : | 26000 Mbps |
| Fec | : | 7/8 | Vedio Pid | : | - |
| Main Audio Pid | : | Auto | | | |

## Broadcasting Round the Clock Audio Frequency

| | | | | | |
|---|---|---|---|---|---|
| French | : | Auto | English | : | Auto |
| Urdu | : | Auto | Arabic | : | Auto |
| Indonesia | : | Auto | Bengali | : | Auto |

அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் அரபி பத்திரிகை அத்-தக்வா, அல்புஷ்ரா, உருது பத்திரிகை பத்ர் வார இதழ், அல்ஃபஸ்ல் இன்டர்நேஷனல் நாளிதழ், அல்-ஃபஸ்ல் (ரப்வா) மற்றும் பிற நூல்களை ஜமாஅத்தின் இணைய தளம் alislam.org-ல் பார்க்கலாம்.

If undelivered please return to:

முகவரி : நிர்வாகி - **நபி வழி**

**அஹ்மதிய்யா முஸ்லிம் மிஷன்**

11, முதல் பிரதான சாலை, யு.ஐ. காலனி, கோடம்பாக்கம்,சென்னை-24. Ph : 24817174

Printed & Published By : **K. NASIR AHMED** From: No.11, First Main Road, U.I. Colony, Kodambakkam, Chennai-24. Ph : 2481 7174. Editor : **O.M. MUZZAMMIL AHMAD**. Printed at : **Script Printers**, Periyar Pathai Choolaimedu, Chennai - 600094.